DINAMALAR

24 APR 2022

PAGE 13

# புதுச்சேரி பேராசிரியருக்கு மதிப்புமிக்க விஞ்ஞானி விருது



■ தேசிய தாவரவியல் மாநாட்டில் மதிப்புமிக்க புகழ்பெற்ற விஞ்ஞானி விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் தினகர ராவை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

**புதுச்சேரி, ஏப். 24–**
தேசிய தாவரவியல் மாநாட்டில் புகழ்பெற்ற விஞ்ஞானி விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியரை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

தமிழ்நாடு, விருதுநகர் செந்திகுமார் நாடார் கல்லூரியில், அண்மையில் 'தாவரத்தின் சமீபத்திய போக்குகள் மற்றும் சவால்கள்' என்ற தலைப்பில் தேசிய மாநாடு நடந்தது.

இதில் புதுச்சேரி பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை பேராசிரியர் தினகர ராவுக்கு மதிப்புமிக்க புகழ்பெற்ற விஞ்ஞானி விருது வழங்கப்பட்டது.

தாவர ஆராய்ச்சி சங்கம் இவ்விருதினை வழங்கி பாராட்டியது.

பேராசிரியர் தினகர ராவ், கடந்த 20 ஆண்டுகளாக தாவர மூலக்கூறு உயிரியல், உயிர் தகவலியல் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்.

விருது பெற்ற பேராசிரியர் தினகர ராவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.